

கோவை நேரு ஸ்டேடியத்தில் டூசின் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக மராத்தான் போட்டி நேற்று நடந்தது.

# உலக டுசீன் தின விழிப்புணர்வு ஓட்டம்

**கோவை, செப். 26–**

உலக டுசீன் தினத்தை முன்னிட்டு, நேரு ஸ்டேடியம் அருகில் நடந்த விழிப்புணர்வு ஓட்டத்தில், 900க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

உலக டுசீன் விழிப்புணர்வு தினம் ஒவ்வொரு வருடமும் செப்., மாதம் உலக அளவில் கடைபிடிக்கப்படுகிறது. இதனையொட்டி, மரபணு பரிசோதனை ஆலோசனை ஆதரவு மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில், நேற்று விழிப்புணர்வு ஓட்டம் நடந்தது.

இதில், 1கி.மீ., 3கி.மீ., 5கி.மீ., 7கி.மீ., என நான்கு பிரிவுகளில் விழிப்புணர்வு மராத்தான் போட்டி நடந்தது. போட்டியை, மாவட்ட கலெக்டர் சமீரன் துவக்கி வைத்து, டுசீன் தசை சிதைவு நோயால்பாதிக்கப் பட்டகுழந்தைகளுடன் சேர்ந்து, ஒரு கி.மீ., ஓடினார்.

டுசீன் பாதிப்படைந்த குழந்தைகள் நேரு ஸ்டேடியத்தை சுற்றி வந்தனர். மற்ற பிரிவினர், நேரு ஸ்டேடியத்தில் துவங்கி, மகளிர் பாலிடெக்னிக் வரை சென்று அங்கிருந்து, அண்ணா சிலை வழியாக நேரு ஸ்டேடியம் வந்தடைந்தனர்.

விழிப்புணர்வு மராத்தான் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, ரொக்கம், கோப்பை, பதக்கம் உள்ளிட்டவை பரிசாக வழங்கப்பட்டன.